ஜி.டி.நாயுடுவின்

பிரயாண அனுபவமும் வாழ்க்கைக் குறிப்புக்களும்

முத்தமிழ் நிலையம்.

JAYAM

தொழில் மன்னா

ஜி. டி. நாயுடுவின் பிரயாண அனுபவமும் வாழ்க்கைக் குறிப்புக்களும்

ஜி. டி. நாயுடு.

ஏ. எஸ். வேணு பி. ஏ.

முத்தமிழ் நிலையம்

புத்தகம் வெளியிடுவோரும், விற்பனையாளரும்

77, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

விலை: அணா 6

முதற் பதிப்பு— டிசம்பர், 1951
வெளியிட்டவர்: மே. சக்கரவர்த்தி நயினார்
முத்தமிழ் நிலையம் சென்னை-1.
அச்சிட்டது: தமிழ் மணி பிரஸ் சென்னை-1.

பதிப்புரை

'முயற்சி திருவினையாக்கும்' என்னும் தமிழ் மறை மொழிக்கு இலக்கியமாக விளங்குபவர் கோயம்புத்தூர் திரு, ஜி. டி. நாயுடு அவர்களாவர். அவருக்குத் தென்னாட்டின் மோட்டார் மன்னரென்றும் சிறப்புப் பெயருண்டு. முதலில் மக்கள் போக்குவரத்துக்காக ஒரு பஸ் ஆரம்பித்து, இப்பொழுது பல மோட்டார் பஸ்களைத் தமிழ் நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்புகின்றார் அவர். அவர், மோட்டாரில் பிரயாணஞ் செய்யும் மக்களுக்காக, ரயில்வே நிலையங்களைப்போல, ஆங்காங்கு தங்க, பல வசதிகள் செய்திருக்கின்றார். முதன் முதலில் அவ் வசதிகளையும், பிற ஒழுங்கு முறைகளையும் செய்தவர் திரு, ஜி. டி. நாயுடு அவர்களேயாவர். அவருடைய யு. எம். எஸ். சர்வீஸ் என்றாலே, அதற்கு ஒரு தனி மதிப்புண்டு.

அன்றியும் அவர், மேனாடு முழுவதும் சுற்றுப் பிரயாணஞ்செய்து, மோட்டார் யந்திரத் தொழில் நுட்பங்களையும், பிற யந்திரத் தொழில்களையும் அறிந்துவந்து, தாமே பல

யந்திரங்களை உற்பத்தி செய்திருக்கின்றார். அவருடைய இல்லம், ஒரு சாதாரண சம்சாரத் தட்டு முட்டு இல்லமா யில்லாமல், பலகலை யக மாய் விளங்குவதைக் கண்டு யாவரும் வியந்து பேசுவர்.

மதி நுட்பமுள்ள நாயுடு அவர்கள், மேனாட்டில் சுற்றுப் பிரயாணஞ் செய்ததில் ஏற்பட்ட அனுபவங்களை, ரேடியோ மூலம் சொற்பொழி வாற்றியதையும், அவருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களையும், நியூ ஜஸ்டிஸ் ஆசிரியர் தொகுத்து எழுதிக் கொடுத்ததை நாங்கள் மகிழ்வுடன் பிரசுரிக்கின்றோம்.

நாயுடுவினுடைய அனுபவமும் வாழ்க்கைக் குறிப்புக்களும் சிறப்பாகத் தமிழ் நாட்டாருக்கும், பொதுவாக இந்திய நாட்டாருக்கும் ஒரு தூண்டுகோலாய் விளங்குமென்று கருதுகின்றோம்.

சென்னை-1. இங்ஙனம்
10—12—51 முத்தமிழ் நிலையத்தார்.

ஜி. டி. நாயுடுவின்
பிரயாண அனுபவமும்
வாழ்க்கைக் குறிப்புக்களும்

சென்ற மே மாதம் இங்கிலாந்தில் நடந்த பிரிட்ஷ் (British Industries Fair) கைத்தொழில் கண்காக்ஷியைப் பார்க்கச் சென்றிருந்தேன். இந்தக் கண்காக்ஷியைப் பார்த்த பின்புதான், யுத்தத்தின்போது மிலிட்டரி டாங்கிகளும் ஏரோபிளேன்களும் மற்ற யுத்தத்துக்கு வேண்டிய தட்டு முட்டுத்தளவாட சாமான்களைச் செய்துகொண்டிருந்த இங்கிலாலந்து தேசம், யுத்தத்துக்குப் பின்பு என்ன செய்திருக்கிறது? என்ன செய்துகொண்டிருக்கிறது என்பதை, இந்தக் கண்காக்ஷியில் கண்ணாடியில் தெரியும் முகம்போல் காட்டிற்று.

இந்தக் கண்காக்ஷியில் ஒரு பல நூறு கைத்தொழில்கள் மட்டிலும் லண்டனிலும் பர்மிங் ஹாமிலும் உள்ள பிரமாண்டமான காக்ஷி சாலைகளில் வந்திருந்தன.

இந்தக் கண்காக்ஷியில் லண்டனிலும் பர்மிங் ஹாமிலுமாக 4000வகை யந்திரமும்.மற்றச் சாதனங்களும் காட்டப்பட்டன: இங்கிலாந்திலேயே நான் இன்னும் அநேக கண்காக்ஷிகளையும் பார்வையிட்டேன். உணவுப் பொருள் கண்காக்ஷி, வியாபார மோடார் கண்காக்ஷி, இன்டர் நேஷனல் மோடார் கண்காக்ஷி, தோல் தொழில்

கண் காகூஷி, புஷ்பக் கண் காகூஷி, ஆகாரப் பொருள்கள் கண் காகூஷி, சலவைத் தொழில் கண்காகூஷி, விவசாயக் கண்காகூஷி, மருந்து விற்பவர் கண்காகூஷி, (Brewery) கண்காகூஷி இப்படியாகப் பலவேறு இடங்களில் பல்வேறு கண் காகூஷிகளையும் பார்த்தேன்.

சென்ற மகாயுத்தத்திற்கு மூன்று நாளைக்கு முன்பு நான் லண்டன் போய்ச் சேர்ந்தேன். அப்போது இங்கிலாந்தைப் பார்த்ததற்கும், இப்போது பார்ப்பதற்கும் அநேக வித்தியாசம் இருக்கிறது. மொத்தத்தில்—எல்லாத் தொழில்களிலும் நூறு சதம் முதல் 500, 1000 சதம்வரை உற்பத்தியை அதிகரித்து இருக்கிறார்கள். விவசாயத்திலுங்கூட இன்னும் கொஞ்ச காலத்தில் இறக்குமதி இல்லாமலே சமாளிக்கக்கூடிய நிலைமைக்கு வந்தாலும் வரலாம். இங்கிலாந்து மட்டும் அல்ல, ஸ்வீடன், டென்மார்க் ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து, பிரான்ஸ் முதலிய மற்றத் தேசங்களுங்கூட மிக அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. இவற்றில் ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து நீங்கலாக, மற்றத் தேசங்கள் யுத்தத்தால் அடைந்த நஷ்டம் சொல்லத்தரமல்ல. அழிந்துபோன கட்டடங்கள் கணக்கு எடுக்க முடியாத அளவில் இருக்கின்றன.

இங்கிலாந்தில் அழிந்துபோன கட்டடங்களில் பல புதுப்பிக்கப்பட்டன. யுத்தத்தில் அழிந்துபோனதின் பலனாகப் பல தொழிற்சாலைகளும், கட்டடங்களும், புது முறையில் மிக விஸ்தாரமாகவும் வெளிச்சம் காற்று முதலிய வசதிகளோடும் கட்டப்பட்டிருக்கின்றன. வேலை செய்யும் தொழிலாளிகள் சாதாரணமாய் அதிகம் உழைக்க

வும், அதனால் அதிக பலன் அடையவும் அநேக சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. குளிர் காலங்களில் தம் வீடுகளில் உஷ்ணம் செய்து கொள்ளவும், சுத்தமாக வைக்க முடியாதவர்களும் தொழிற் சாலைகளில் அதிக சௌகரியத்தோடு வேலை செய்து வருகிறார்கள். இவ் வசதிகளை நேரில் நாம் பார்த்தால் ஒழிய, அறிந்துகொள்ளக்கூடிய தல்ல.

ஐரோப்பாவிலுள்ள சில தேசங்களில் வறுமை தாண்டவம் ஆடினாலுங்கூட, தொழில் அபிவிருத்தி கொஞ்சங்கூட பின் தங்கவில்லை. உதாரணமாக ஜர்மனியை எடுத்துக் கொள்ளுவோம். யுத்தத்துக்குப் பின் இதை நான்கு பாகமாகப் பிரிக்கப்பட்டது. இதில் கிழக்கு ஜர்மனி என்பது ரஷியாவின் ஆதிக்கத்திலும், மேற்கு ஜர்மனியானது, இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய மூன்று தேசங்களின் ஆதிக்கத்திலும் இருந்து வருகிறது. ரஷியாவைத் தவிர மற்ற மூன்று தேசங்களும் ஏகோபித்துக் கூட்டு முறையில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ரஷிய ஆதிக்கத்திலிருக்கும் கிழக்கு ஜர்மனியி லுள்ளவர்களில் பெரும்பாலோர் மிக அதிருப்தி அடைந்து வருகிறார்கள் என்பது வெளிப்படை. மேற்கு ஜர்மனியிலும் சிறுபான்மையருக்குச் சில விஷயங்களில் அதிருப்தி இருந்தாலும், பெரும்பாலோர், அமெரிக்க, இங்கிலாந்து உதவியை எதிர் பார்த்துக்கொண்டு திருப்தியுடன் இருக்கிறார்கள். யுத்தம் நின்றதும், புனர் உத்தாரணத்துக்கு, இப்போது இருக்கும் நிலைமைக்கு வர இங்கிலாந்தும் அமெரிக்காவும் பெரும் அளவில் உதவி செய்திருக்கிறது. சொல்லப் போனால்

யுத்த காலக் கடைசியிலும், யுத்தம் நின்ற பின்னும், ஜர்மனியில் உணவே இல்லை என்று சொல்லும்படி இருந்தது.

அங்கே ½ அல்லது ¾ பவுண்டு வெண்ணெய்க்கு ரூ-100 முதல் 200 ரூபாய் பெறும்படியான நகைகளையோ வேறு சாமான்களையோ கொடுத்துத்தான் வாங்கவேண்டும். ரூபாய் 400 - 500 பெறும்படியான ஒரு மேஜையைக் கொடுத்து, ஒரு ஜோடி பூட்சு வாங்கினவர்களும் உண்டு.

யுத்த நிறுத்தத்தின்போது ஜர்மெனியின் நாணயமான மார்க்குகளின் மதிப்பு மிகத் தாழ்ந்துபோனதோடு அதற்கு எந்தச் சாமானும் அகப்படுவதில்லை. கொஞ்சக் காலத்துக்கு முன் பழைய ஜர்மன் மார்க்குகளின் விலை 100-க்கு 6-டச்சு மார்க்காக மாற்றப்பட்டு வந்தது. இப்படி இருந்ததினால், அநேக கோடிக்கணக்கான மார்க்குகள் வைத்திருந்தவர்களுக்கு மிகப் பெருத்த நஷ்டம் நேர்ந்தது. இது எப்படி இருந்தாலும், அந்தச் சமயம் அமெரிக்க உதவி இல்லாதிருக்குமானால், உண்ண உணவில்லாக் குறையினாலேயே ஜர்மன் மக்கள் பூராவும் மடிந்திருப்பார்கள். இந்த நன்றியை ஜர்மன் மக்கள் மறவாதிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

தொழிற்சாலைச் சட்டம் இங்கு இருந்தாலுங்கூட, ஒவ்வொரு தொழிலாளியும் இராப்பகல் வேலை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். நம் தேசத்திலிருப்பது போல், எப்போது மணி அடிப்பார்கள், எப்போது வெளியில் போகலாம் என்று இருக்கும் ஒரு தொழிலாளியையாவது, நான் பார்த்த நூற்றுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகளில்

ஒரு இடத்திலாவது கண்டதில்லை. ஒவ்வொருவரும் தன் தேசம் என்பதை நினைத்து, தன் தொழில்தான் தன் செல்வம் என்பதையும் நினைத்து, ஒரு துளிகூட ஊக்கம் தளராது ஒழுங்காக வேலைசெய்து, தங்கள் தொழிலின் பலன் என்கிற செல்வத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

செல்வம் என்பது ஒன்றுமே இல்லாத யுத்தத்துக்குப் பின் தொழில்களை ஆரம்பித்து, இப்போது ஜர்மனி முன்னேற்ற மடைந்திருப்பதைப்போல வேறு எந்த நாடும் அடைய வில்லை என்று சொல்லலாம்.

ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது, தாம் செய்யும் மிஷின்களை, மற்ற ஒரு தொழிற்சாலைக்குக்கொடுத்தும், அந்தத் தொழிற்சாலையில் செய்யும் மிஷின்களை அல்லது ஆபீசுக்கு வேண்டிய இதர சாமான்களை அல்லது மூலப் பொருள்களை வாங்கிக் கொள்ளுகிறார்கள். இந்த மாதிரி ஒவ்வொருவரும் தான் செய்யக்கூடியதைச் செய்து கொடுத்து, அதற்குப்பதிலாகத் தனக்கு வேண்டிய ஆயுதங்கள் அல்லது சாமான்களை வாங்கிக்கொண்டு, தொழில்களில், யுத்தத்துக்கு முன் இருந்ததைவிட, ஒரு மடங்கு அல்லது இரண்டு மடங்கு உற்பத்தியான சாதனங்களை வெளியூருக்கு ஏற்றுமதி செய்யச் சக்தியுடையவர்களாய் இருக்கிறார்கள்.

இன்னும் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஜர்மனியில் (Merecedəz Beuz) மெரிசிடிஜ் பியூஜ் என்னும் தொழிற்சாலை யுத்தத்தின்போது பாம்களினால்

அடியோடு நாசமாக்கப்பட்டது. ஒரு நாளில் மட்டும் இந்தத் தொழிற்சாலையின்மேல் 19,000 பாம்கள் விழுந்திருக்கின்றன. இதே மாதிரி 1,20,000 வரை இந்தத் தொழிற்சாலைமேல் பாம்கள் விழுந்து, ஒரு புகை போக்கிக் குழாயும் ஒரு கார் நிற்கும் ஷெட்டும் தவிர்த்து, மற்றக் கட்டடங்கள் எல்லாம் தரை மட்டம் ஆய்விட்டது.

யுத்தம் நின்றபின், இந்த இரண்டு மூன்று வருஷத்தில் இந்தத் தொழிற்சாலை முழுவதும் நவீன முறையினால் கட்டடங்கள் நிறுவப்பெற்று, தற்சமயம் நாள் ஒன்றுக்கு 200-300 கார்களும் லாரிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகின்றன. இதற்கு உள்ளிருக்கும் விசாலமான ரோடுகளே 10 மைலுக்குமேல் நீளம் இருக்கிறது என்றால், இந்தத் தொழில் எவ்வளவு தூரம் எவ்வளவு குறுகிய காலத்தில் முன்னேறி இருக்கிறது என்பதைச் சற்று கவனித்துப் பாருங்கள்.

உற்பத்தியாகும் மிஷின்களோ, அல்லது பொருள்களோ தரத்தில் ஒருக்காலும் குறைந்ததல்ல. விலையில் மற்றத் தேசங்களைப்போல் உயர்ந்ததும் அல்ல. இது மட்டுமல்லாமல், யுத்தகாலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட எல்லா நவீன முன்னேற்றங்களும் உள்ள உற்பத்திப் பொருள்களும் உடையவர்களாய் இருக்கிறார்கள்.

யுத்தத்துக்கு முன் ஒரு மிஷின் 10-சதுர அடி அளவில், 2-டன் கனத்தில் செய்யப்பட்டு 100, சாமான்கள் உற்பத்தி செய்யக்கூடியதாய் இருந்ததானால், அதேவிதமான சாமான்களை உற்பத்தி செய்வதற்கு முந்திய மிஷின்

களின் பரப்பில் கால்பாகமும், எடையில் கால்பாகமும் உள்ள யந்திரங்களைச் செய்து, குணத்திலும் ரசத்திலும் இரண்டு மடங்கு உயர்ந்ததாகவே செய்து வருகிறார்கள்.

நம் நாட்டிலே நடப்பதை இதனோடு ஒப்பிட்டுச் சீர் தூக்கிப்பார்க்கும்போது, யாருக்கும் வருத்தம்தான் உண்டாகும். இங்கே ஒருவர், மற்ற ஒருவர்மேல் குறை சொல்லிக்கொண்டிருந்தாலும், தொழிலாளிகள் தாங்களாகவே ஒரு சிறிதளவு யோசித்து, தொழில் செய்யும் துறையில் மட்டிலும், மேனாடுகளைப் பின்பற்றி நடப்பார்களேயானால், நம் நாடும் மற்ற நாடுகளைப்போலவே உயர்ந்த நாடாக மதிக்கப்படலாம்.

சண்டை உற்பத்தியானதும் ஜர்மனியால். சண்டையினால் முழுதும் அழிந்துபோனதும் ஜர்மனி. அப்படியிருந்தும், இன்று ஜர்மனியில் எந்தச் சாமான்களும் கட்டுப்பாடின்றிக் கிடைத்து வருகிறது. அவர்களுக்கு வேண்டிய மாமிசம், முட்டை, அரிசி, பருப்பு,காய்களுக்கும் மற்றத் தேசத்திலிருந்தே வருகிற வாழைப்பழம் புகையிலை ஆகியவற்றிற்கும் ஜர்மனியில் பஞ்சம் இல்லை. நம் நாட்டில் நாம் உபயோகித்துவரும் உப்புமாவோ, பர்பியோ, நாம் ஜர்மனியில் செய்ய வேண்டுமானால், ஒரு அரைமணி நேரத்தில் சாதாரண ஊர்களில் கூட, வேண்டிய சாமான்கள் எல்லாம் கிடைக்கும் என்றால், அங்குள்ள வசதியைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது.

முந்தி இருந்த நாணயமாகிய மார்க்கின் மதிப்பு மிகக் குறைந்துவிட்டதால், தற்காலம் பணக்கஷ்டம்

கொஞ்சம் இருக்கின்றது என்று சொல்லலாம். ஆனால் ஒவ்வொரு ஜர்மானியனும் ஜர்மானியப் பெண்ணும் செய்துகொண்டிருக்கும் இடைவிடா உழைப்பு என்னும் செல்வம், ஒவ்வொரு வருஷமும் வளர்ந்து, அயல் நாடுகளுக்கு வேண்டிய பொருள்களை அதிகம் அதிகமாக ஒவ்வொரு வருஷமும் அனுப்பக்கூடிய சக்தி, படிப்படியாக வளர்ந்துவருகின்றபோது, பணக்கஷ்டம் என்பதும், அது இருக்கிறது என்பதும் மறைந்துவிடுகிறது.

நம் தேசத்தில் இன்று பொது ஜனங்கள் சாப்பாட்டுக்கு இல்லை என்றும், சர்க்காரின் பேரில் குற்றம் சொல்லுவதும், விலைவாசிகளுக்குத் தக்கபடி சம்பளம் கிடைக்கிறதில்லை என்று தொழிற்சாலைக்காரர்களையோ கவர்மென்டையோ தொழிலாளிகள் குற்றம் சொல்வதும், சம்பளம் அதிகம் கொடுத்தாலுங்கூடத் தொழிலாளிகள் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்வதில்லை என்று தொழிற்சாலைக்காரர்கள் சொல்லுவதும்—கவர்ன்மெண்டாரும் தொழிற்சாலைக்காரர்களும், பொதுமக்களும் தொழிலாளிகளும் ஒத்து உழைப்பதில்லை என்று சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டு, நம் நாட்டின் காலம் கடத்தப்பட்டு வருகிறது.

இதில் முதல் தப்பு யாருடையது, இரண்டாவது தப்பு யாருடையது என்பதை நிர்ணயிக்க முடியாமலிருந்து வருகிறது.

என் சுற்றுப்பிரயாணங்களில் கண்ட தொழில் முன்னேற்றங்களைப்பற்றிச் சொல்லும்போது சந்தோஷமடைந்

தாலும் கூட, நம் நாட்டில் இப்போது நடந்துவரும் தொழில் பின்னேற்றங்களை நினைக்கும்போது, சந்தோஷமும் மறைந்து வருத்தம் உண்டாகிறது.

பொதுவாக என் அனுபவத்தில் வந்த சில உதாரணங்களைச் சொல்லுகிறேன். இங்கிலாந்திலுள்ள ஒருவருக்கு ஒருவர் கார் வேண்டுமானால், அதற்தாக ரெஜிஸ்டர் செய்த தேதியிலிருந்து 2 அல்லது, அதுமுதல் 5 வருஷம் வரை காத்திருந்து பெறவேண்டும். காரும் இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. யுத்தத்துக்கு முன்பைவிட பலமடங்கு உற்பத்தியாகிறது. அப்படி யிருந்தும் ஏற்றுமதிக்குத்தான் முதல் சலுகை காட்டுகிறார்கள்.

உலகத்திலேயே கார்கள் மயமான தேசம் என்று சொல்லக்கூடியதும், செல்வத்திலேயே மிதந்துகொண்டிருக்கக்கூடியதுமான தேசமாகிய அமெரிக்காவிலுங் கூட, ஆயிரக்கணக்கான கார்களை இங்கிலாந்திலிருந்து வாங்கப்படுகின்றன. இந்தியாவுங்கூடப் பெருவாரியான கார்களை இங்கிலாந்திலிருந்து வாங்கிவருகிறது. இந்தியாவிலிருந்து இங்கிலாந்து போகிற ஒருவருக்கு ஒருவாரத்தில்-ஏன்-ஒரே நாளில்கூட ஒரு கார் வாங்கிக்கொள்ள முடியும். இந்தியாவில்கூட பணமுள்ளவர்கள் எப்போதும் எந்த இடத்திலும் கார்வாங்க முடிகிறது. இங்கிலாந்தில் பிறந்தவருக்குக் கார் அகப்படாதிருக்கும்போது, மற்றத் தேசத்தவருக்கு வேண்டியதற்கு அதிகமாகக் கார்கள் கிடைக்கிறதென்றால், அதற்குக் காரணம் என்ன? தங்களது அருமையான தொழில் திறமைகளின் பலன்களை, இதர தேசங்களுக்கு

விற்று, தங்கள் தேசம் செல்வத்தில் தழைத்து ஓங்க வேண்டும் என்பதைவிட, வேறு என்ன இருக்க முடியும்?

மேல் நாடுகளில், அடுத்த ஒன்று அல்லது அநேக வருஷங்களுக்கும் கூட, உற்பத்தியாவதை ஏற்றுமதி செய்வதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படி அதிக ஆர்டர்கள் புக் செய்திருந்தாலும், மேற்கொண்டு வரும் ஆர்டர்களைப் புக் செய்யாமல் விடுவதில்லை.

என் சுற்றுப் பிரயாணத்தின்போது ஜர்மெனியில் சில இயந்திரங்கள் வாங்குவதற்காகப் பல ஊர்களைச் சுற்றிக் கொண்டு வரும்போது, நடுராத்திரியில், ஒரு தொழிற் சாலைக்குச் சிறிது தூரத்திலுள்ள சொந்தக்காரரிடம் ஒரு சில சாமான்களை நான் நேரில் பார்க்கவேண்டும் என்று சொன்னபோது, அவர் வேறு ஒரு யோசனையும் செய்யாமல், மிக அன்போடு தன் தொழிற்சாலைக்கு அழைத்துப் போய், அந்த நடு ராத்திரியில் தானாகவே இயந்திரங்களை நடத்திக் காட்டி, வேண்டியவற்றை எடுத்துக் கொடுத்தும் அனுப்பினார் என்றால்—அவர்கள் தங்கள் தொழிலிலும் விற்பனையிலும் எவ்வளவு தூரம் ஊக்கம் செலுத்துகிறார்கள் என்பதை நாம் அறியலாம். இதற்கு நேர்மாறாக நம் தேசத்தில் ஏற்றுமதிக்கு மிகவும் அக்கறை செலுத்தினாலுங்கூட, சக்கையை வைத்துவிட்டு, ரத்தத்தைத்தான் வெளியில் அனுப்புகிறார்கள். தனக்கு ஒரு சிறிதோ அதிகமோ இலாபம் கிடைத்தால் போதும் என்று நினைக்கிறார்களே தவிர, அதனால் நம் தேசத்துக்கு எவ்வளவு கெடுதல் ஆகிறது என்பதை ஒருவரும் மறந்துங்கூட

நினைப்பதில்லை. உதாரணமாக இப்போது இருக்கும் பஞ்சு பருத்தி நூல் நிலைமையே போதும்; வேறு வேண்டிய தில்லை.

இறக்குமதி விஷயத்திலும் இதேமாதிரி உதாரணங்கள் பலவற்றைச் சொல்லலாம். இவற்றிற்கெல்லாம் கவர்ன் மெண்டையே குறை கூறினாலும் கூறலாம். ஆனால் தொழி லாளர்கள் தங்களிடம் இருக்கும் குறைகளை நீக்கி, ஒழுங் காக வேலைகளைச் செய்து தொழில் செல்வங்களைப் பெருக் கும்போது, மற்றக் குறைகள் தானாக நீங்கிவிடும் என்பதை மேல் நாடுகளைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொண்டா வது நம் நாடு முன்னேற்றமடையும் என்று நம்புகிறேன்.

❀

''திரு. ஜி. டி. நாயுடுவின் பிரயாண அனுப வம்'—என்ற விஷயம், சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தாரின் அனுமதி பெற்று, நூலாசிரியர் இத்துடன் சேர்த்திருக்கின்றார்,

தொழில் மன்னர்

ஜி. டி. நாயுடுவின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

ஏ. எஸ். வேணு பி. ஏ.

கோவை தந்த கோமான், கொடைவள்ளல், ஆராய்ச்சி நிபுணர், தொழில்மேதை, மோட்டார் மன்னன், தென்னிந்திய நபீல்ட், என்று இன்று பாராட்டி, புகழப்படும் புருஷர் ஜி. டி. நாயுடு. உழைப்பாலேயே உயர்ந்து, உலகப் புகழ்பெற்ற அறிஞர்களில் நம் ஜி. டி. நாயுடுவும் ஒருவர். அவரைப்பற்றி அறிந்தவர் சிலர்—அறியாதார் பலர். இந் நிலைக்குப் பலர் பல காரணங்கள்—கூறலாம். ஆனால் இன்று இல்லாவிட்டாலும். எதிர் காலத்தில் மக்களால் போற்றக்கூடிய—புருஷர்களில் இவர் நிச்சயம் ஒருவராக இருப்பார்.

உலக வரலாற்றில் எல்லா அறிஞர்களும், அவர்களின் வாழ் நாளில் புகழ்மாலை சூடியதில்லை. அதுவும் நம் நாட்டில் இறந்த பிறகுதான்—மறைந்தவர்களின் மாண்பைப்பற்றிப் பேசுபவரும் திறமையைப்பற்றித் திக்கெட்டும் முரசுகொட்டுபவரும், அறிவுத்திறனைப்பற்றி பெருமைப் படுபவர்களும் ஏராளம். சதியை ஒழிக்க—பாடுபட்ட மோகன்ராயை மக்கள் வெறுத்தனர் அக்காலத்தில்.

யார் விரும்பினாலும் இறந்த கணவனுடன் உடன் கட்டையேற, ஒருவரும் சம்மதிக்கமாட்டார்கள் இக்கா

லத்தில், இதை நினைத்தால்—நம் நாட்டு மக்களின் மனப்பான்மையும்—உண்மையை உடனே ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிந்தனையின் தன்மையும்—எளிதில் உணரமுடிகிறது. ஆனால் இதைக்கண்டு லட்சியம் ஈடேறிவிட்டதே, மக்களும் மாறிவிட்டனரே, என்று ஆனந்தமடைய அந்த "ராய்" இன்று இல்லை. அதைப்போலத்தான் நம் நாட்டில் உண்மைக்கு—உழைக்கும் உத்தமர்களின் வாழ்க்கையும் அமைந்திருக்கும், இதற்கு ஜி. டி. நாயுடு விதிவிலக்கல்ல.

ஏன் "திராவிடநாடு" என்று கேட்கும்—சிறுமதியினரும், உங்களுக்குத் திராவிடநாடு—கிடைத்தால் ஆட்சிக்குரிய திறமையுடன் யார் இருக்கின்றனர் என்று இடித்துப் பேசும் எத்தர்களும்—எதற்கெடுத்தாலும் பார்ப்பனர்கள் தான் மேதைகள்; அவர்களால்தான் எதையும் சாதிக்கமுடியும் என்று நம்பிப் பல்லவி பாடும் கோழைகளும், நம்மில் ஓர் மாணிக்கம் அறிஞர் ஜி. டி. நாயுடுவின் திறமையை அறியவேண்டியது அவசியம்.

உலகில் எத்தனையோ மனிதர்கள் தோன்றி மறைகின்றனர். அவர்களில் பலர் உண்டு. ஊனை வளர்த்து, உல்லாசமாக ஊர் சுற்றி—உயிரை விடுபவர்கள் ஏராளம்—அதுவும் நம் நாட்டில்—பிறந்து பிறவியின் பயனை வாழ்வில் பிறருக்கு நல்லது செய்யும் பிறவிகள் சொற்பம்; அதுவும் நம் நாட்டில். ஆனால் நாயுடுவைப்போன்ற மனித மேதைகள் நம் நாட்டில் பிறந்து—பல அரிய சாதனைங்களைச் செய்திருக்கின்றனர்.

இவர் பிறந்த ஓராண்டுக்குள், தாயின்-தனி அன்பைக் காணும் வாய்ப்புக்கிட்டாமல் அனாதையானார். தந்தை துரைசாமி நாயுடு குழந்தையைத் தன் மைத்துனர்-ராமசாமி நாயுடுவிடம் ஒப்படைத்தார் - அன்பாய்வளர்த்து ஆளாக்க.

நாயுடு பள்ளிச் சென்றார் படிக்க. ஆனால் பள்ளிப் படிப்பு பிடிக்கவில்லை. இருந்தும் மாமன் பயத்திற்காகப் பள்ளிக்குப்போய் வந்தார். தமிழ் படிக்கவும், பேசவும், எழுதவும் மட்டுந்தான் அவருக்குப் பள்ளியில் கிடைத்தது. படிப்பு என்றாலே படிப்பவர்களுக்கு ஊக்கமிருக்கவேண்டும். இவருக்கோ — படிப்பென்றாலே வேம்பாக இருந்தது. பள்ளி, சிறையாகக் காட்சியளித்தது. அதினின்றும் விடு பட அவர் வழிதேடினார்; வேதனைப்பட்டார்—பிறகு ஒரு முடிவுக்கு வந்தார். ஆசிரியரிடம் குறும்பு செய்தார். அவர் இவரைப் பள்ளியினின்றும் விடுதலைசெய்தார். அது மட்டுமா, அவருடைய மாமனும் கோபங்கொண்டு அவரைத் தந்தையிடம் அனுப்பி வைத்தார்.

அங்கு, வயலைக்காக்கும் வேலைதான் நாயுடு வாழ்வில் துவங்கியது. அதைப் பிரியமுடன் செய்தார். மரங்கள், குளம், வயல் இவைகளே அவரின் புத்தகங்களாக மாறின. அழகிய இயற்கையே அவருக்குப் பள்ளியாக மாறியது. ஓய்வு நேரங்களில் பல தமிழ் நூல்களைப் படித்தார். பிரிய முடன்—தானாகவே, பிறர் பலவந்தத்தால் அல்ல.

அப்போது, ஒரு நாள் வீதிவழியே நாயுடு தனியே போகும்போது, வழியில் ஓர் புட்டி(USED BOTTLE)கீழே

கிடப்பதைக் கண்டு அதை எடுத்துப் பார்த்தார். புட்டிக்குள் ஒன்றுமில்லை—புட்டியின்மேல் ஒட்டப்பட்டிருந்த காகிதத்தில் அச்சடிக்கப்பட்டிருந்த வாசகங்களைப் படித்தார். அது ·வலியைப் போக்கும் மருந்துபுட்டி. வெள்ளைக்காரன் தயாரித்தது என்பதைத் தெரிந்துக்கொண்டார். அந்த மருந்தை அமெரிக்காவிலிருந்து தருவித்துப் பலர் நோயைப் போக்கினர். புட்டிகளும் ஏராளமாய் விற்பனையாயின. காசுகள் குவிந்தன. வியாபாரமும் ஓங்கிற்று. பிறகு கடிகாரங்கள்—சங்கீத வாத்தியங்கள் — வரவழைத்து — விற்பனை செய்தார் ; வெற்றியும் கண்டார்.

திருமணம்

வாலிபப் பருவத்தில் பிள்ளைகளுக்குப் பெண்பார்த்து முடிப்பது பெற்றோர்களின் கடமையாக இருந்தது அவர் பிறந்த நாளில். அதைப்போலவே நாயுடுவுக்கும்—பெண் பார்த்து, சோதிடனைக்கண்டு, நல்ல நாள் முடிவு செய்யப் பட்டுத் திருமணத்திற்கு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஆனால், திருமணத்தன்று நாயுடுவைக் காணவில்லை. மணமகனில்லாமல் திருமணம் எப்படி நிறைவேறும்! தேடிப் பார்த்தனர் எங்கும்! முடிவில் நாயுடு ஓர் குடிசையில் இருப்பதைக் கண்டுபிடித்தனர். என்ன கோபம்? ஏன் திருமணத்திற்கு வரவில்லை எனச் சுற்றத்தார் கேட்டனர் கூட்டமாக. அதற்கு நாயுடு திருமணம் செய்துகொள்ள நான் இல்லாவிட்டால் என்ன? புரோகிதன் இருக்கும் இடத்தில் எனக்கென்ன வேலை? என்று புரோகிதத்தின் தன்மையை விளக்கிப் புரோகிதர்கள் செய்யும் சடங்குகள்

அர்த்தமற்றவை—அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினர். அனைவரும் திகைத்தனர். முடிவில் சடங்குகள் இல்லாமல் திருமணம் நிறைவேறிற்று-புரோகி தன் இல்லை! அவன் செய்யும் சடங்குகளும் இல்லை. இந்த நிகழ்ச்சி ஒரு பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அதைக் கண்டு அஞ்சவில்லை நாயுடு—பகுத்தறிவின் தூதரானர்—பழைய கோட்பாடுகளை வெறுத்தார். அறிவுப் பாதையில் சென்றார். ஆண்டவன் இருப்பதை நம்ப மறுத்தார். முன்னேற்றமடைய மனதைத்திடப்படுத்தினர். மதத்தில் நம்பிக்கையில்லையென்றார். ஏன் ? குறிப்பாகக் கூறப்போனல், அறிவுக்கு ஒவ்வாத ஒவ்வொன்றையும் அடியோடு ஒழிக்க, அவர்—முன்னணியில் நின்றார்—முயற்சியும் செய்தார். இன்றும் செய்கிறார்.

தொழில் வளர்ச்சி

தனது இருபதாம் வயதில் நாயுடு,கோவை சேர்ந்தார். கோவை ஓர் அழகிய நகரம். ஓரளவுக்கு நாகரிகத்தைக் காணக்கூடிய இடம். நாயுடு, மேனாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்த பல கருவிகளை நம் நாட்டவர் விற்பனை செய்து காசு சேர்ப்பதைக் கண்டார். பணம் வேறு நாட்டுக்குச் சென்றாலும், அதன் பலனை மக்கள் அனுபவிப்பதைக்கண்டு மகிழ்ச்சிகொண்டார். தானும் அத்தகைய கருவிகளைக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், அனுபவிக்க ஆசைப்பட்டார். அந்த ஆசை நிறைவேற, கையில் பணமில்லையே என்று பரதவித்தார். அப்போது அவர் மாதம் மூன்று ரூபாய் சம்பளத்தில் ஓட்டல்வேலை பார்த்துக்

கொண்டு இருந்தார். அந்தச் சிறிய தொகையைக் கொண்டு அவசியமான செலவுகளைமட்டும் செய்து தன் ஆசையை நிறைவேற்றிக்கொள்வதற்கு 400 ரூபாய் சேர்த்தார். இந்தச் சிறிய தொகைக்கு ஒரு புதிய மோட்டார் சைக்கில் வாங்கினார். அதை ஓட்டிப்பார்த்தாரா? அது தான் இல்லை! உடனே அதை அணு அணுவாகப்பிரித்து ஒவ்வொரு பாகத்தைப்பற்றியும் தெரிந்துகொண்டார். அத்துடன் நின்ருரா?

பணம் கடன் பெற்றுப் பருத்தி வியாபாரம் செய்தால் இலாபம் கிடைக்குமென்றும், அதனல் பல அரிய சாதனங்களைப்பெற்றுப் பல விஷயங்கள் தெரிந்துகொள்ள உதவியாக இருக்குமென்றும் நம்பினர். அவ்வியாபாரத்துக்காக நண்பரைக் கடன் கேட்டார். கொடுத்தனர். ஒரு பருத்தி சுணல் தொழிற்சாலையைச் சொந்தமாகத் துவக்கினர். இலாபம் குவிந்தது. லட்சக்கணக்கில் பணம் சேர்த்தார். அத்தனையும் பம்பாய் நகரத்தில் பருத்தி வியாபாரத்தில் நஷ்டமடைந்தார். மீண்டும் கோவைக்கு வந்தார் கையில் காசில்லாமல். ஒருவரும் உதவிசெய்ய மறுத்தனர். ஆனல் ஸ்டேன்ஸ் என்னும் துரை நாயுடுவின் திறமையை மதித்திருப்பதால் ஒரு, (BUS) பஸ் வாங்கித் தந்தார். நாயுடு டிரைவர் ஆனர். தானே பஸ்ஸைப் பொள்ளாச்சியிலிருந்து பழனிக்கு நாள்தோறும் ஓட்டினர். மீண்டும் பணம் அவரிடம் சேர்ந்தது. பல பஸ்களுக்கு முதலாளியானர். இன்று இந்தியாவில் நாயுடுதான் அதிகப்படியான பஸ்களும், திறமைவாய்ந்த ஸ்தாபனமும் வைத்திருக்கிருர். அந்த

ஸ்தாபனத்தின் பேர்தான் யு. எம். எஸ். இவருடைய ஒழுங்கான நிர்வாகத்தைப்பற்றிப் பல மேனாட்டவர் கண்டு பாராட்டினர் என்றால், அதுவே நாயுடுவின் தொழில் மேன்மைக்கு நற்சாட்சி பத்திரம்.

கண்டு பிடித்தவை

இந்த இருபதாம் நூற்றாண்டில் மேனாட்டவர் கண்டு பிடிப்பவைகளைப்பற்றிப் படிக்கிறோம். பாராட்டுகிறோம். ஆனால் நம்மைப் பற்றி நினைக்கும்போது வெட்கித் தலைகுனியும் வேதனையுடன் திகைக்கவேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. நாம் கண்டுபிடிப்பவைகளை நினைக்கும்போது, அணுகுண்டு ஆராய்ச்சிக் காலத்தில்—ஆண்டாள் திருப்பாவையும், ஆளில்லா விமானக் காலத்தில்—ஆறுகால பூஜையும், கண்முன் தோன்றுகிறது. இக்நாளிலே நாம் அறியாவிட்டாலும், நம் நாயுடு பல நுட்பமான தொழில்களை ஆராய்ந்து பல சாதனங்களைக் கண்டு பிடித்துவிட்டார். அதை மக்கள் அறியாமலிருக்கலாம்; மதமெனும் மதுவை அருந்தியிருப்பதால், அரசாங்கம் பாராட்டாமல் இருக்கலாம்—அவர் இங்கு பிறந்திருப்பதால். பார்ப்பனப் பத்திரிக்கைகள் எழுதாமல் இருக்கலாம், அவர் ஒரு திராவிடன் என்பதால்.

பல மணிநேரங்கள் பாடுபட்டுப் பல அரிய கருவிகளைக் கண்டுபிடித்தார்—பாரில் உள்ளவர்கள் பயன்பட. மோட்சத்தின்மீது மதியைச் செலுத்தி முக்திக்கு வழி தேடாமல் அறிவைப் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்தார்—அதன் விளைவில் கிடைத்த சாதனங்கள் ஏராளம்.

அவர் முதன் முதலில் கண்டுபிடித்தது—மின்சாரத்தின் உதவியாலே சவரம்செய்துகொள்ளும் கருவி. உடல் நலம் குன்ருமல் குறுகிய நேரத்தில் நல்ல முறையில் பணியாற்றும் கருவி இது. அடுத்து அதிகப்படியான முறைகள், உபயோகிக்கத் தக்க ஓர் உயர்ந்த (BLADE) பிளேட் கண்டுபிடித்தார். அதன் விலையோ காலணு. இதை யறிந்த ஜர்மன் நாட்டு அரசாங்கம், இவருக்கு நற்சாட்சி பத்திரங்கள் வழங்கின. நம் நாட்டவர்களுக்குத்தான் தேர் திருவிழாக்களிலே இருக்கும் அக்கறையைத் திருப்ப நேரமில்லையே!

அடுத்து போட்டோ காமிராவில் பல புதுமுறைகளையும் அரிய சாதனங்களையும், கண்டுபிடித்தார். பழங்களிலிருந்து சத்துப்போகாமல் சாரைமட்டும் பிழிந்து எடுக்க ஒரு கருவியைக் கண்டுபிடித்தார். அதுமட்டுமா! ஏழையின் வீட்டிலும் ஓய்ந்த நேரத்தில் உல்லாசமாக இசையைக் கேட்க ஒரு (RADIO) ரேடியோ கண்டுபிடித்தார். விலையோ குறைவு. வேலையிலோ உயர்ந்தது. இருந்து என்ன பயன்! அரசாங்கம் ஆதரித்தால்தானே அது நாட்டுக்குப்பயன்படும். அந்நியர்கள் கொள்ளையிடும் இலாபத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று அவர் பாடுபடுகிருர். அந்நியர்களின் வியாபார மோகத்திலாழ்ந்துகிடக்கும் நம் அரசாங்கத்திற்கு எப்படி அவர் முயற்சிக்கு ஆதரவு தரவேண்டுமென எண்ணம் எழும். தான் கண்டுபிடித்த சாதனங்களைத் தயார் செய்வதற்கு நம் நாட்டில் தொழிற்சாலைகளை நிறுவ அனுமதி கேட்டார். அரசாங்கத்தினரும் மறுத்துவிட்டனர்! நாயுடு எதிர்பார்த்ததைப்

போல், படித்துப் பட்டம்பெற்றவர்கள் செய்யமுடியாததைச் செய்துகாட்டினர். ஆனால் பலன் இல்லாமல் போய் விட்டது. அரசாங்கத்தின் அனுமதியில்லாதபோது, அவர் என்ன செய்யமுடியும்? அனுமதி மறுக்கப்பட்டதற்கு அவர் அரசாங்கத்தைக் குறை கூறுவிட்டாலும், நாட்டின் நன்மையை நினைத்து, மக்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவர்கள் அரசங்கத்தைக் குறை கூறுமல் இருக்கமுடியாது. நம் நட்டைவிட நிலப்பரப்பிலும், ஜனத்தொகையிலும், குறைந்து இருக்கும் பல மேல்நாடுகள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்தைக்காண முடிகிறது. இன்று நம் நிலை ஜனத்தொகையிலும், நிலப்பரப்பிலும் பெரியதாக இருந்துங்கூட, நாம் பயனற்றுக் கிடக்கிறோம். நில வளமும், நீர் வளமும், நிறைந்தது நம் நாடு. ஆனால் காண்பது என்ன?—பஞ்சம் தாண்டவம்! பட்டினிப் பிணங்கள் பெருக்கம்!—ஏன் இந்த நிலை?—இதை நினைக்கும்போது நாயுடுவைப்போன்ற மேதைகளை நாடு பயன்படுத்திக் கொள்ளாதது தான் காரணம் என்று கூறலாம். இதை அரசாங்கம் ஏற்க மறுக்கலாம்—அதற்காக நாம் உண்மையைக் கூறுமல் இருக்கமுடியாது. நாட்டின் நன்மை நமது அரசாங்கத்திற்குக் குறிக்கோளாக இருந்திருக்குமானல் நாயுடுவுக்கு நல்ல ஆதாவுகொடுத்து இருக்கவேண்டும். அது தான் நல்லாட்சிக்கு அடையாளமுங் கூட.

கட்டாந்தரை, பட்டுப்போகும் மரம், தோண்டுவாரற்று கிடக்கும் கனிப்பொருட்கள், உருக்குலையும் சிலை, சிதைந்துவரும் சித்திரம், மறையும் தாய்மொழி, இவைகளைக்காணும்போது பரிதாபப்படுபவர் சிலர்; பெருமூச்சு—

விடுபவர் சிலர். ஆனல், அவைகளுக்குப் புத்துயிர் அளிக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் நற்பணிபுரிபவர் நூற்றில் ஒருவரைத் தான் காணமுடியும். கட்டாந்தரை யிலே பச்சைப்பசேலெனப் பயிர்!—துளிர்விட்டு வான ளாவ வளரும்!—சுரங்கத்திலிருந்து கனிப்பொருள்கள்!—அழகிய சித்திரங்கள்! உயிருடன் காட்சியளிக்கும் சிலை கள்!—தாய்மொழிக்கு முதல் ஆதரவு!—என்ற நிலை உண்டாக்கமுடியும். அதைச் செய்யப் பாடுபடுபவர்கள் பலர் இருப்பதைப்போல் நம் நாட்டுத் தொழில்வளர்ச்சி குன்றி இருப்பதைக்கண்டு நாயுடுவைப் போன்றவர்கள் முன்வந்து, முன்னேற்றத்திற்கு, வழிகாட்டிகளாக விளங் கும்போது அவரைப் பயன்படுத்திக்கொள்ளாமல் இருப் பது மிகவும் வருந்தத்தக்கது. அரசாங்கம் இவருக்கு அனுமதிதர மறுத்துவிட்டது என்ருல், நாட்டின் நன் மைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்று தான் பொருள். நல்லதைச் செய்ய நினைப்பவருக்கு, எந்த அறிவாளிகள் நாட்டிலும் ஆதரவு இருக்கும். ஏனே நம் நாட்டில் அத்தகையவர்களுக்கு மதிப்பில்லை! ஏன் மறுத்த னர் அரசாங்கத்தார்?

மறுத்தவர்கள் யார்?—வெள்ளையரா?—இல்லை நம்ம வா தான்?—அந்நியரை விரட்டியவர்கள். வெளிநாட்டுச் சுரண்டல் ஒழிக என்று கோஷமிட்டு அந்நிய ஆட்சியை ஒழித்த காந்தியாரின் சீடர்கள்தான். பிறகு ஏன் மறுத்த னர். நாயுடுவுக்கு அனுமதி தந்தால் பணம் வெளி நாட் டிற்குச் சென்றுவிடுமா?-இல்லை; அல்லது அவர் அந்நிய நாட்டவரா?—அதுவுமில்லை!—பிறகு ஏன் மறுத்தனர்.

நாயுடுவின் தொழில்திட்டங்கள் தவறென்று கண்டுபிடித்த னரா? இல்லை! நாட்டிற்கு உதவாதது என்ற நிலைமையை விளக்கினர்களா? இல்லை! பிறகு ஏன் மறுக்கவேண்டும்! ஆளத்தெரியாதவர்களா ஆட்சியில் இருப்பவர்கள்? இல்லை! அவர் திட்டங்களை புரிந்துகொள்ளமுடியாத பதுமைகளா? இல்லை! பிறகு ஏன் மறுத்தனர்?—இதுதான் யோசிக்க வேண்டிய இடம் இதிலேதான் நாம் கேட்கும் 'திராவிட நாடும்' அடங்கியிருக்கிறது. இது நம் பிரிவினைத் திட்டத்தை கையாண்டி செய்யும் எத்தர்களுக்குப் புரியாது. 'தென்னுடாவது வடநாடாவது' எனறு நம்மைப்பார்த்துப் புரியாமலே பிதற்றும் புது ரகத் தேசியத் தலைவர்களுக்குப் புலனுகாது. 'அகில இந்தியாவில்தான் சுபீட்சம் அனைவர்க்கும்' என்று அறியாமைப் பல்லவி பாடும் பேர்வழி களின் சிந்தனைக்கு எட்டாது.

ஆனல், சிந்திக்கும் தன்மையும், எதையும் ஆராய்ந்து முடிவுகட்டும் மனப்பான்மையும், இருக்கும் அறிவாளி களுக்கு எளிதில் விளங்கும் நாம் எடுத்துக்காட்டாமலே. நாயுடு ஓர் தென்னிந்தியன், அதிலும் 'திராவிட' அனுதாபி. தென்னுட்டில் இப்படி ஒரு மறுமலர்ச்சியும் தொழில் முன் னேற்றமும் உண்டாக எப்படி அவர்கள் அனுமதிப்பார்கள்? இங்கிலாந்திலிருந்து மோட்டாரின் பாகங்களைவரவழைத்து, அவைகளைப் பூட்டி உருவாக்கி, 'இந்துஸ்தான்'காராகவெளி யனுப்ப வடநாட்டானுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது அதே நேரத்தில் அங்கு! வடநாட்டில். இங்கேயே தொழிற் சாலைகளை நிறுவி கார்களையும், மற்றக் கருவிகளையும் உரு

வாக்க அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது; தென்ஞட்டில் அதுமட்டுமா? இந்தியாவிலேயே, மத்திய அரசாங்கத்திற்கு அதிகமான வரித்தொகை செலுத்துவது சென்னை மாகாணம்! அந்தப்பணத்தைக்கொண்டு தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன வட நாட்டில். ஏன் அந்தநிலை? இதைத்தான் கேட்கிறது திராவிடத்தின் குரல்! சுதந்தரச் சீடர்களின் செவியிலே இது விழாமல் இருக்கலாம். அவர்களை அல்ல நாம் கேட்பது- தென்ஞடில் வாழும் மக்களைக்கேட்கிருேம் இந்த நிலைமை நீடிக்கலாமா என்று. மத்திய அரசாங்கத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாயை வடநாட்டிலே வாழும் ஒரு கோடீஸ்வானுக்குத் தொழில் வளர்ச்சிக்காகக் கடன் கொடுத்திருக்கிறது அரசாங்கம்! இங்கு நாயுடுவுக்கு அனுமதிதா மறுக்கிறது. இதைப் பார்க்கும்போது, நாம் திராவிடநாடு தனியே பிரியவேண்டும் என்று கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்? என்ன நீதியைக் காணமுடியும்?

கஷ்டப்பட்டுக் காசைச்சேர்த்து ஐரோப்பாவிற்குச் சென்று அமெரிக்காகவைப்பவனிவந்து பலதொழிற்சாலைகளையும், தொழில் மேதைகளையுங் கண்டு,பல அரிய விஷயங்களை ஆராய்ச்சி செய்து, பல புதுசாதனங்களைக் கண்டுபிடித்தார் நமக்காக—பணம் சேர்க்கவேண்டும் என்கிற நோக்கத்தோடு அல்ல. அவர்மட்டும் மேனுட்டில் பிறந்திருந்தால் அங்கு மக்கள் அவரை வாழ்த்தி இருப்பர். அறிஞர்கள் போற்றியிருப்பர். ஆட்சியாளர் பயன்படுத்திக் கொண்டிருப்பர். இங்கு அவருக்கு இருட்டடிப்பு, அனுமதிமறுப்பு, ஆதரவுத்தர கைவிரிப்பு, இன்னும் சொல்லப்போனல் நையாண்டி

செய்பவர் சிலர்; பொறுமைப் படுபவர் சிலர்; நிறைவேறாது அவர் திட்டம் என்று கேடு நினைப்பவர்கள் பலர். இதனால் யாருக்கு நஷ்டம். நாட்டிற்கா? நாயுடுவிற்கா? நாயுடு ஓர் அதிசயமனிதர். பணம் இருப்பவர்களிடம் நல்ல குணம் இருக்காது என்பதைத்தான் உலகம் அறியும். நாயுடு அதற்கு மாறானவர். பணமும் குணமும் அவரிடம் சீருடன் வளரும் இரட்டையர். தான் சேர்த்த பணத்தைப் பல நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தினார் நல்ல காரியமென்றால், கோயில் கட்டி, குளம்வெட்டி, கும்பாபிஷேகம் செய்வதென்றோ! உருக்குலைந்த வாகனத்தைப் புதுப்பிப்பதென்றோ நினைத்து விடாதீர்கள். அவர் பணத்தை ஏழைகளுக்கும், கல்வி வளர்ச்சிக்கும், பயன் படுத்தினார் பல லட்சக்கணக்கான ரூபாய்களைக் கல்லூரிகளுக்கு உதவியாகத் தந்தார். சொந்தமாகவே கோவையில் ஒரு கல்லூரி கட்டித் சிறம்பட நடத்தி வருகிறார். அவரிடம் பணம் நாளுக்குநாள் குவிந்த வண்ணமாகத்தான் இருந்தது அதே நேரத்தில் அதைப் பிறர் நன்மைக்குப் பயன்படுத்தினார் நன்கொடையின் பட்டியல் வளர்ந்தது. மனமுவந்து அள்ளித தந்தார் சுகாதார வளர்ச்சிக்கு லட்சக்கணக்கில். தொழிலாளர் நன்மைக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும், யுத்த நிவாரணத்திற்கும், மாஜி வீரர்களின் நன்மைக்கும் இன்னும் எண்ணற்ற நற்காரியங்களுக்கு அவர் பணம் உதவி செய்தார் சிறு தொகைகள் அல்ல, பெருந்தொகைகள் லட்சக் கணக்கில் பிறர் பார்த்து அவரை 'இந்தியன் நப்பீல்ட்' என்று கதைக்கும் அளவிற்கு.

கோவையில் இன்று அவரை அறியாதார் இல்லை அவர் இருக்கும் 'கோபால் பாக்' ஒரு களஞ்சியமென்

ருல் தவருகாது. நான் அவருடன் பொருள் கண்காட்சி சாலையைப் பார்க்க ஒரு நல்ல சமயம் வாய்த்தது. அது வரை நாயுடுவைப்பற்றி நான் அதிகம் கேட்டதுண்டு, பார்த்ததும் உண்டு. பார்த்த பிறகு இப்படியும் ஒரு அதிசய மனிதர்—கோபால் பாக்கைப்போன்ற ஒரு அறிவுக்கோயில்—இந்த நாட்டில் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். 'எது வேண்டும் சொல்' என்ற பாட்டைக் கேட்டிருப்பீர்கள் ஆனல், இது வேண்டும் என்ருல் கிட்டுமா? உண்மையில் அது கிட்டாது? ஆனல், நாயுடுவிடம் எது வேண்டுமானுலும் கிடைக்கும்?

பலன் தரும் விஷயங்கள், அறிவுக்காகப் புத்தகங்கள் நிறைந்த படிப்பகம்—தேவையான கருவிகளைத் தயார் செய்யும் தொழிற்சாலை—பயன்தரும் கல்வியைப் போதிக்கும் கல்லூரி. ஒழுக்கத்தை வளர்க்கும் மாணவர்விடுதி. காலத்தை வீணுக்காமல் பொழுதுபோக்க நல்ல இடங்கள். கருத்துக்களைப் பரப்பச்செய்யும் அச்சகம்—அதுமட்டுமா?

ஒரு பக்கம் பருத்தி மரம்! உயரமாக வளர்ந்து, உயர்ந்த பருத்தியைத் தரும் காட்சி—வேருெரு பகுதியில் மக்காச்சோளச் செடிகள். ஒரே செடியில் பல கதிர்கள் காய்த்துக் குலுங்கும் காட்சி. நாள், தேதி, மாதத்துடன் சாவி தரவேண்டிய அவசியமில்லாமலே மின்சாரத்தினுல் ஓடும் கடிகாரம். நிழலே காணமுடியாத மண்டபம். புன்னகையுடன் வேலைசெய்யும் பாட்டாளிகள். மோட்டார் சம்பந்தப்பட்ட கருவிகளைச் செய்யும் யந்திரங்கள். அவைகளின் நுணுக்கங்களைக் களிப்புடன் கற்றுக்கொள்ளும்

மாணவர்கள். இவைகளையெல்லாம் காணும்போது நாயுடு ஓர் அதிசய மனிதர்! கோபால்பாக் ஓர் அறிவுக் களஞ்சியம்! என்றால் மிகையாகுமா?

எளிய வாழ்க்கை; கருமேனி; தமிழன் உடை; படர்ந்த நெற்றி; கூர்மையான பார்வை; அடக்கமான நடை; ஆடம்பரமில்லாத பேச்சு; கடமையை உணர்ந்த வேலையாட்கள்; புன் முறுவலுடன் ஓடி ஆடும் ஒரே மகன் ராஜகோபாலன்; இத்தனைக்கும் இடையே வந்தவர்களிடம் அவர் நல்ல முறையில் பேசுவதும், கடிதங்களுக்குப் பதில் எழுதுவதும், மாணவர்களிடம் அக்கறை காட்டுவதும், தொழில் வளர்ச்சியில் ஊக்கம் செலுத்துவதும், தன் ஸ்தாபனங்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடுவதும், காணும்போது யார்தான் நாயுடுவைப் பாராட்டாமல் இருக்கமுடியும். இந்தத் தள்ளாத வயதில் அவர் ஒரு நாளைக்கு நாலுமணி நேரம் தான் உறங்குவதற்கு ஒதுக்கியிருக்கிறார். தன் சொத்தைப் பொது உடைமையாக்கி, நாட்டு மக்களுக்குப் பயன்படுத்த வேண்டுமெனத் துடித்தார் நாயுடு! அதற்குப் பதில், "கட்டவில்லை வருமானவரி; உன் கணக்கோ சரியில்லை" என்று தொல்லைத்தரத் திட்டம் தீட்டியது அரசாங்கம். அதன் விளைவு நாட்டு மக்களுக்கு நஷ்டத்தில் முடிந்தது.

நாயுடுவின் திறமை, மக்களுக்குப் பயன்படவில்லை. தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் குறைந்து விட்டது. முயற்சி செய்தவர்களை முறியடிக்கப் பட்டனர். நல்லெண்ணக்காரர்களின் மனம் புண்படுத்தப்பட்டது. ஒன்றும் செய்ய முடியாமல் வாழ்க்கை மீது வெறுப்புக்கொண்டார், நாயுடு

வேதனையும் பட்டார். என்ன பயன்! சுவரில்லாமல் சித்திரம் எப்படி வரையமுடியும். நல்ல நஞ்சை நிலமில்லாமல் அதிக விளைவு எப்படிக்கிடைக்கும். திறமைமட்டும் இருந்தால் போதுமா? அதற்குத் தக்க ஆதாரவும் உறு துணையாக இருக்கவேண்டாமா? இதைத்தான் கேட்கிறோம் நாம் நம்மைப் பார்த்து. "இதுகளுக்கு என்ன தெரியும்? தனி நாடு பிரிந்தால் இவர்கள் வாழமுடியுமா? ஆட்சி செய்ய ஆட்களேது?" என்று எள்ளி நகையாடுபவர்களே. சிந்திக்கட்டும்; சிந்திக்கும் தன்மை இருக்குமானால், அலசிப் பார்க்கட்டும். உண்மையை உணரவேண்டுமானால், சின்னத் தலையர்களுக்கும், சிறுமதியினருக்கும் நம்முடைய லட்சியம், நாட்டுப் பிரிவினைத்திட்டம் அதிலே, அடங்கிக்கிடக்கும் உண்மை—புலனாகாமல் இருக்கலாம் இன்று.

நமக்கென்று ஆட்சி, அதன் அதிகாரம் நம்மிடம், என்ற நிலை இருந்திருந்தால் நம் நாட்டின் தொழில் வளர்ச்சி மேன்மையடைந்திருக்குமல்லவா? யோசித்துப் பார்க்கட்டும் டெல்லிதாசர்கள்.

இங்நிலையில் நாம் திராவிட நாடு கேட்பது தவறு? கூறட்டும் நெஞ்சுமேல் கைவைத்து. காங்கிரஸ் அறிவாளிகளாக இருப்பார்களேயானால், நாம் கூறும் பிரிவினைத் திட்டத்தின் பலாபலன்களை ஆராய்ந்து பார்க்கட்டும். இதுவரை ஏட்டிலும், மேடையிலும், பல காரணங்களைச் சுட்டிக்காட்டி இருக்கிறோம். திராவிட மேதை ஜி. டி. நாயுடு மறைக்கப்படுவதற்கும், அவர் திட்டங்களை முறியடிப்பதற்கும், முக்கியகாரணம், திராவிடம் என்றும் அடிமைப்

பட்டுக் கிடக்கவேண்டும் என்ற திட்டத்தைத்தவிர வேறு என்ன இருக்கமுடியும். அந்தத் திட்டம் நீண்டநாள் நீடிக்காது. அதற்கு முடிவுகாலமும் நெருங்கிவிட்டது. நாடெங்கும் கேட்கிறது திராவிடத்தின் முழக்கம். இளங் காளைகளின் அணிவகுப்பும், அறிஞர்களின் முயற்சியும் விரைவில் ஒன்று சேரத்தான் போகிறது. அதன் முடிவாக அடிமைத் திரை கிழிக்கப்பட்டு அறிஞர் நாயுடுவின் திறமை வெளிப்படத்தான் போகிறது விரைவில்.

பறித்த பூக்கள்

திராவிட நாட்டுத் தலைவர்கள்,

சி. என். அண்ணாத்துரை எம். ஏ. திரு வி. க. பெரியார், மு. கருணாநிதி, ஆசைத்தம்பி, பாரதிதாசன், கா. அப்பாத்துரையார், ஜி. டி. நாயுடு, முதலியவர்களுடைய உணர்ச்சிமிக்க அரிய கருத்துக்கள் கொண்டது. பொன்னிற மேல் அட்டையுடன் கையடக்கமுள்ள பதிப்பு. விலை: அணா 4

கையெழுத்துப் புத்தகம்

மேற்கண்ட பல பெரியார்களின் கையெழுத்துக்களடங்கிய அழகிய புத்தகம்.

விலை: அணா 4

முத்தமிழ் நிலையம் சென்னை-1.

கைத்தொழில் நூல்கள்

		ரூ	அ
1.	சோப் செய்தல்	1	0
2.	இங்கி செய்தல்	0	12
3.	புகைப்படம் பிடிப்பது எப்படி ?	0	12
4.	குடிசைத்தொழில் களஞ்சியம்	0	12
5.	சாயத்தொழில் நூல்	0	8
6.	பிரஷ் செய்தல்	0	8
7.	ரப்பர் ஸ்டாம்பு செய்தல்	0	8
8.	ரோமசங்காரி செய்தல்	0	4
9.	மேனாட்டுக் கீழ்நாட்டுக் கைத்தொழில்கள் 101	0	8
10.	தைலங்கள் செய்தல்	0	8
11.	பேனாக்கட்டைகள் செய்தல்	0	8
12.	தேனீவளர்த்தலும் தேன் சேகரித்தலும்	1	0

குடிசைத்தொழில் பதிப்பகம்
77. வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1